# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-8.

காவல் சார்பு ஆய்வாளர்கள் [(தாலுகா மற்றும் ஆயுதப்படை) (ஆண், பெண் மற்றும் திருநங்கை)] பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2025.

## அறிவிக்கை எண் : 01/2025.

தேதி: 04.04.2025

1. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா மற்றும் ஆயுதப்படை)] பதவிகளுக்கான நேரடி தேர்வு 2025-க்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பங்களை (Online Application) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூ.36,900 - 1,16,600/-.

| | | | |
|---|---|---|---|
| i | அறிவிக்கை தேதி | | 04.04.2025 |
| ii | இணைய வழி விண்ணப்பம் துவங்கும் தேதி | | 07.04.2025 |
| iii | இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | | 03.05.2025 |
| iv | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | பொது விண்ணப்பதாரர்கள் | தேதி பின்னர் அறிவிக்கப்படும். |
| | | துறை விண்ணப்பதாரர்கள் | |

**2. மொத்த காலிப்பணியிடங்கள்: 1299 + 53 (பற்றாக்குறை காலிப்பணியிடங்கள்).**

| பதவியின் பெயர் | பணி | காலிப்பணியிடங்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | |
| காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா) | தமிழ்நாடு காவல் சார் நிலைப் பணி | 654 | 279 | 933 |
| காவல் சார்பு ஆய்வாளர்கள் (ஆயுதப்படை) | | 255 | 111 | 366 |
| | மொத்தம் | 909 | 390 | 1299 |

**குறிப்பு:-** 53 SC & ST பற்றாக்குறை காலிபணியிடங்களின் விவரம் தகவல் சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. ஒதுக்கீடு*:**

துறை ஒதுக்கீடு – தாலுகா மற்றும் ஆயுத படையில் தலா 20% காலி பணியிடங்கள்.
சார்ந்துள்ள வாரிசுதாரருக்கான ஒதுக்கீடு - மீதமுள்ள 80% காலிப்பணியிடங்களில் 10% (9% + 1%).
விளையாட்டு ஒதுக்கீடு - மீதமுள்ள 80% காலிப்பணியிடங்களில் 10% (7% + 3%).

***பற்றாக்குறை காலிப்பணியிடங்களுக்கு பொருந்தாது.**

**4. வகுப்புவாரி இடஒதுக்கீடு :**

தற்போதுள்ள விதிகளின்படி வகுப்புவாரி இடஒதுக்கீட்டின் சதவீதம், பற்றாக்குறை காலிபணியிடங்களைத் தவிர அனைத்து பதவிகளுக்கும் பொருந்தும். பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கான இடஒதுக்கீடு விவரங்கள் அறிவிக்கையில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. குறைந்தபட்ச கல்வித்தகுதி :** ஏதாவது ஒரு இளங்கலைப்பட்டம்.

**6. வயது வரம்பு (01.07.2025-ன் படி) :** 20 வயது நிறைவுற்றவராகவும் மற்றும் 30 வயது நிறைவடையாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(விண்ணப்பதாரர்களின் வயது உச்சவரம்பு வகுப்பு / பிரிவுகளுக்கு தக்கவாறு மாறுபடும்).

**காவல்துறை தலைவர் / உறுப்பினர் செயலாளர்,**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,**
**சென்னை – 08.**

**குறிப்பு:** விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கும், மேற்கொண்டு தகவல் அறிவதற்கும் இவ்வாரியத்தின் **www.tnusrb.tn.gov.in** என்ற இணையதளத்தை பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

செ.ம.தொ.இ./339/வரைகலை/2025